அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

மலர் 1 | விரோதி௵—ஐப்பசி௴ 1949௵ அக்டோபர்௴—நவம்பர்௴ | இதழ் 7

சரவணப் பொய்கையில் ஆறு தீப்பொறிகளாய் விழுந்து தோன்றிய ஆறு குழந்தைகளையும் கார்த்திகைப் பெண்கள் அணைத்தெடுத்து வளர்த்தல்
(கந்த புராணச் சித்திரவிளக்கம்—5)

விலை 2½

2.18

பொருளடக்கம்

			பக்கம்
1.	அனுபூதி மண்டபம்	(திருப்புகழ் மணி)	1
2.	நல் விருந்து	(இளவழகனார்)	3
3.	இருப்பவல்	(கி. வா. ஜகந்நாதன்)	8
4.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(V. S. வெங்கடராமன்)	15
5.	ஔவைப் பிராட்டியார்	(ஸ்ரீவத்ஸன்)	20
6.	சொற் பெரும் பொருட்கடல்	(V. S. V.)	28
7.	வேண்டுகோள்		32

நூதன வர்ணப் படங்கள்

குமரகுருபரன் (முருகன்) ரூ. 1-4-0

சைவ சமயாசாரிய நால்வர் ரூ 1-4-0

அமிர்தவசனி காரியாலயம், 54. பந்தர் தெரு., சென்னை

சிறந்த பாராயணப் புத்தகங்களுக்கு

பி. டி. பாணி அண்டு கம்பெனி

17, வெங்கடாசல செட்டி தெரு.,

திருவல்லிக்கேணி, மதராஸ் 5

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 1 } விரோதி௵ ஐப்பசி௴ 1949 அக்டோபர்—நவம்பர் { இதழ் 7

அனுபூதி மண்டபம்

(திருப்புகழ் மணி)

ஆதிசங்கரர் ஜகன்மாதாவுக்கு ஒரு மண்டபம் கட்டி சிம்மாஸனம் இட்டு, தாயை வீற்றிருக்க அழைத்திட்டார். அதை ஞாபகம் ஊட்டுகின்றது சென்னை மல்லீஸ்வரர் கோயிலில் விளங்கும் அனுபூதி மண்டபம். ஆதிசங்கரர் வகுத்த மண்டபத்தைப் பாருங்கள். அமிர்தம் நிறைந்த பால் சமுத்ரம். அலைகள் மோதுகின்ற ஒரு மண்டபம். மண்டபமோ ஒரு மணித்வீபத்தில் கட்டப்பட்டிருக்கின்றது. தேஜோமயமான மணித்வீபம் கல்பகமரங்களாலும் கடம்பமரங்களாலும் சுற்றிலும் அலங்கரிக்கப்பெற்றது அந்த மண்டபம். பராசக்தி முருகனன்றியும், முருகன் வேலன்றியும் காணப்படுவதில்லை. அதுபோல் கல்பகம் கடம்பம் என்ற

சிக்கற் றுட்குக் கருணைச் சுத்தச் சித்தித் தமிழைத்
திட்டத் துக்குப் புகலப் பெறுவேனோ.

இரண்டு வகை விருக்ஷங்கள் மண்டபத்தைக் கவிந்து கொண்டிருக்கின்றனவாம். ரத்னங்களால் செய்யப் பட்ட ஆயிரம் கம்பங்கள் நாட்டி அலங்கரிக்கப்பட்டது அந்த மண்டபம். அந்தச் சபாமண்டபத்தின் மத்தியில் ஒரு விமானம் கட்டப்பட்டிருக்கின்றதாம். ஓம் எனும் தத்துவத்தை விமர்சனம் செய்வது விமானம். தொழும்தெய்வம் ஓங்கார ரூபமெனும் தத்துவத்தை உபதேசிப்பதாம். அந்த விமானத்தினிடையிலே ஆசாரியாள் தனது சிந்தை யெனும் சிம்மாசனத்தை ஏற்படுத்தி ஜகன்மாதாவை அழைக்கின்றார்— எதற்கு? எப்பொழுதும் வீற்றிருக்க.

ஆயிரம் என்றால் கணக்கற்றது என்றும் ஒரு பொருள் உண்டு. கணக்கற்ற அன்பர்கள் உள்ளமெ லாம் ரத்னஸ்தம்பங்களாய் நிற்க, இவர்கள் கூடிய இந்தத் தொண்டர் குழாம் ஆயிரக்கால் மண்டபம் என்றே சொல்லவேண்டும். இருட்டுப் போகாத ரத்ன ஸ்தம்பங்கள். அடியார்கள் உள்ளத்தில் எழும் அன் பெனும் பெரும் வெள்ளத்தால் பெருகிய சமுத்திரத் தில் த்வீபம் போல்(தீவுபோல்) அமையப்பெற்றுள்ளது இந்த அநுபூதி மண்டபம். கல்பகத்தருப்போல் நின்று கேட்டதையெல்லாம் அளிக்கும் அம்மையார் ஒரு பக் கம். கடம்ப வனம் போல் கடப்ப மலர் அணிந்து வேலேந்தி ஷண்முகமாய் விளங்கும் முருகன் ஒரு புற மிருக்கின்றார். இந்தத் தேவேந்திர சபையில் தூணுக் குத்தூண் அநுபூதி வாக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன வாடா மலர்கள். வித விதமான வர்ணங்கள். ஞானவா சனை அடர்ந்த மண்டபம். ஸ்ரீப்ரமராம்பாள் விளையாடி

இனிவிட வேதாந்தப ரமசுக வீடாம் பொருள்
இதவிய பாதாம் புயம் அருள்வாயே.

முருகனைக் குலாவும் சபை. கண்திறந்து அனுபூதி நாதசங்கீத மணி மண்டபத்தைத் தெரிசித்த பின்னர், கண்மூடி வெளிச் சென்றாலும் யார்தான் தங்கள் மனோ ராஜ்யத்தில் இந்த மண்டபத்தை மறப்பார்கள். பண்ணும் பாடலும் நிறைந்துள- உருவில் அருவாய் விளங்கும் சபை. மருவில் மலராய் மணக்கும் சபை. கருவில் உயிராய்க் கலக்கும் சபை. மணியாய் ஒளிர்ந்திடும் பேரின்பச்சபை. வாரீர், சாரீர், சிவானந்த போகப் பெருக்கடைவீர்.

சுபம் !

நல் விருந்து

[இளவழகனார்]

காரைக்கால் அம்மையார், தனதத்தருக்கு ஒரே புதல்வியார். ஆதலின், அவர் நாகபட்டினத்திற்குப் போகாதபடி, தம் கணவனுடன் காரைக்காலிலேயே வாழ்தற்கு வேண்டும் வசதிகளைத் தனதத்தனார் செய்ய மனங்கொண்டார். தனியாக அழகிய மாளிகையொன்று அருகில் அமைத்தார். ஏராளமான பொன் பொருள்களை மகிழ்வுடன் வழங்கினார். அம்மையின் கணவனும், இசைந்த உள்ளத்தோடு காரைக்காலில் தங்கி வாழ்க்கை மேவினான்.

அம்மை தகுதி வேறு, அவர் கணவனது நிலைமை வேறு என முன்னும் அறிந்தோம். அம்மையார் உள்ளம் அருளுலகத்தில் நிலாவியது. அவர் கணவன் பரமதத்தன் எண்ணம், பொருளுலகத்தில் உலாவியது. அம்மையார்

மவுன பூரித சத்திய வடிவினை
மாயா மற்குப் புகல்வாயே.

அருளுலகத்திலிருந்து மனையறத்தை நோக்கினார்; கணவன் பொருளுலகத்திலிருந்து மனையறத்தை நோக்கினான்.

"இருவேறு உலகத் தியற்கை; திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்னும் பொன்மொழியை ஒத்திருந்தது இவ்விருவரின் இருவேறு வாழ்க்கையியற்கை!

'நம்பர் அடியார் அணைந்தால் நல்ல திருவமுது அளித்தும், செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் முதலாயின தகுதியின் கொடுத்தும் உம்பர் பிரான் திருவடிக்கீழ் உணர்வு மிக ஒழுகினார்' அம்மையார். அவர்தம் இல்லாளனோ 'வளம் பெருக்கி மிகப் புரியும் கொள்கையினில் மேவினான்'. ஆயினும், அம்மையார், மனையறத்தை ஒரு நடக்கை முறையாகக் கொண்டு, ஒருவர் அருளையும் ஒருவர் பொருளையும் பெருக்கிக் கொண்டு வந்தனர் எனலாம்.

வாழ்க்கையின் உட்போக்கு இவ்வாறு வேறுவேறு முகமுடையதாயினும், பொதுப் போக்கு ஒத்துச் சிறந்திருந்தது. எவராலும் குறை காண இயலாதபடி, இவர் இல்வாழ்க்கை, நடைமுறையில் அவ்வளவு இனிதாய் இருந்ததென்றே கூறுதல் வேண்டும்.

வேற்றுமையிலும் இவ்வளவு ஒற்றுமை இருந்ததற்கு ஒரு நல்ல காரணம் உண்டு; அதனை உலகம் உணர்ந்து கொள்ளல் இன்றியமையாதது. அருளெண்ணத்தில் அம்மையாரும், பொருளெண்ணத்தில் கணவனும் சிறந்தவராயில்லாமல், அம்மையார் பொருளெண்ணத்திலும் கணவன் அருளெண்ணத்திலும் கருத்தூன்றியவராய் இருந்திருந்தால், வாழ்க்கையில் இவ்வளவு ஒற்றுமை காண்டல் அரிதாயிருந்திருக்கும்.

தேவச்சொர்க்கச் சக்கிர வர்த்திப் பெருமாளே,
பாடப் பத்திச் சித்த மெனக்குத் தரவேணும்.

மனையும் மனையறமும் மனைவியின் மேன்மையால் இனிமையாம். மனைவி மாட்சிமையற்றுக் கணவன் எவ்வளவு மேன்மையுற்றவனாயினும், இல்லறம் அத்துணை இனிமை செய்யாது.

"மனைமாட்சி யில்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்."

என்னும் பொய்யாமொழி இங்கு நன்கு நினைவுகூர்தற்குரியது. மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்று திருவள்ளுவர் சிறப்பித்ததும் இதனாலேயே. மேலும், வாழ்க்கையின் பொறுப்பு முழுதும் மனைவியின்பால் ஏற்றியே, அவர்,

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் [தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்று மறை வகுத்துச் செல்கின்றார். ஆதலால், கணவன் மனைவி என்னும் இருவருள், மனைவி உயர்ந்தவளாய் அல்லது இருவரும் உயர்ந்தவராய் இருத்தலால் மட்டுமே வாழ்க்கை சிறக்குமென்று துணியலாம்; அமைதியும் இன்பமும் தொண்டும் பயனும் உண்டாகுமென்று தெளியலாம்.

'திருத்தொண்டர் புராணம்' முதலிய வாழ்க்கை வரலாற்று நூல்கள், சிறந்தோர் வாழ்க்கை மாட்சியைச் சித்திரிப்பவை. அச் சிறந்தோர் பலரும் தகுதியான வாழ்க்கைத்துணை யுடையவரே என்பது, அவர்தம் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து தெரிகின்றது. அந்நூல்களில், தகுதி சற்றுக் குறைந்த கணவராயுள்ளார் வரலாறுகளேனும் காணப்படும்; மற்று, தகுதி நிலைகுன்றிய மனைவியராயுள்ளார் வரலாறுகள் காணப்படா. மேலும், தகுதி

எத்தனையு நெஞ்சில் எத்தன முயங்கி
இத்தனையி லஞ்ச லெனவேணும்.

மிகுந்த மாதரால் அவர் கணவர் வரலாறுகள் மாட்சிமைப் படுஞ் குறிப்பும் அங்கங்கும் எடுத்துக்காட்டப் படுகின்றது. 'திருநீலகண்ட நாயனர்,' 'இளையான்குடி மாறர்,' 'பாண்டியன் நெடுமாறன்' முதலியோர், தம் வாழ்க்கைத் துணையால் மாட்சிமை எய்தினோராவர். பண்டைக்காலத்தில் விளங்கிய 'கோவலன்' முதலிய ஆடவர் சிலரும், இத்தகையோராவர்.

மாதர் இவ்வாறு தங் கணவரினும் உயர்ந்த தகுதி வாய்ந்திருக்குங்கால், அவரது வாழ்க்கையும், ஒற்றுமை இனிமை முதலிய நலங்களைப் பெற்றுத் திகழ்கின்றது. காரைக்காலம்மையார் வாழ்க்கை, அதனாலேதான் பிறர்க்குக் குறை தெரியாததாய் விளங்கிற்று; தகைசான்ற சொல் காத்துப் பெருமை மிகுப்பதாயிற்று

மேலும், பொருளுக்கு ஆடவரும் அருளுக்கு மாதரும் சிறப்பின் உரியர். காரணம், பொருள் முயற்சிக்குரிய அறிவு ஆண்மை வன்மை முயற்சி முதலிய பண்புகள் ஆடவர்க்கும், அருள் நலத்திற்குரிய இரக்கம், பெண்மை மென்மை, உணர்ச்சி முதலிய இயல்புகள் மாதர்க்கும் பிறவிப்பேருகவே அமைந்திருக்கின்றன. எனவே, காரைக்காலம்மையார் அருளெண்ணத்திற் சிறந்திருந்தது, அவரது பிறவியியற்கையோடு ஒத்த உரிமை ஒழுகலாறும் ஆயிற்றென்க.

ஒரு நாள், பரமதத்தனைக் காணவந்தவர் சிலர், கையுறையாக இரண்டு மாங்கனிகள் அவனுக்கு அளித்தனர். அவற்றை அவன் தன் வீட்டுக்கு அனுப்பிவைத்தான்; அம்மையாரும் அவற்றை வாங்கிவைத்தார்.

அந்நேரத்தில், திருத்தொண்டர் ஒருவர் மிக்க பசியுடன் மனை நோக்கி வந்தார். சமையல் முடியவில்லை.

விரகு கெட்டரு ளாகு விட்டிரு
வினைய றப்பதம் அருள்வாயே-

கறியமுதுகள் ஆகவேண்டும். ஆனால், வந்தவர் பசியின் நிலைமையோ பொறுக்கக்கூடியதாய் இல்லை.

அம்மையார், அடியார் திருவடிகள் விளக்க நீர் அளித்து, இலை போட்டார். திருவமுது இட்டார். கறியமுதுக்கு அங்கு என் செய்வார்?

சிறிது நினைந்து, 'இறைவனுக்கு அடியவரே விருந்தினராய் வந்துள்ளார்; இது பெறவரிய விருந்து; இதற்கு மேற் பெறத்தகுந்தது வேறு இல்லை' என்று எண்ணித் துணிந்து, மிக்க விருப்பத்துடன், தம் கணவன் அனுப்பி வைத்த மாங்கனிகளில் ஒன்றைக் கறியமுதாகப் படைத்து அவர் பசித் துன்பத்தை அம்மையார் போக்கினர். கிழத்தனத்தாலும் கொடும்பசியாலும் மிகக் களைத்து வந்த திருத்தொண்டர், மாங்கனியோடு சுவையமுது உண்டு தளர்வு நீங்கி, அம்மையார் உதவியைப் பாராட்டிச் சென்றார்.

சில கருத்துக்கள் இங்கே நம்மை உயர்ந்த நாகரிகத்திற்கு ஈர்த்துச் செல்லுகின்றன; நன்கு கருதத் தகுந்தவை.

விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டே இருந்து இல்வாழ்க்கையை மக்கள் ஏற்கின்றனர். பசி நேரத்திற்கு உணவூட்டுதல் விருந்துக்குச் சிறப்பு. வருகின்ற விருந்து நம்பரடியார் எனின், பேறு அதன்மேல் வேறு இல்லை. 'இல்லறம்' என்பதே இவ்வாறு விருந்தோம்புதலை அடிப்படையாகக் கொண்டது.

இம் மனையறம் புரிதற்கு ஓர் ஆணும் பெண்ணும் மணங் கொள்கின்றனர்; பொருள் ஈட்டி வாழ்க்கை நடத்துகின்றனர்; ஆகவே, அந் நோக்கம் நிறைவேறுகின்ற

அறிவே யழிந்த அறிவாகி நைந்து
அடியேன் மயங்கி விடலாமோ.

வாய்ப்பு நேருகின்றபோது, அதனை இழந்துவிடுதல் நன்றாகாதன்றோ!

கணவன் இல்லத்தில் இல்லை; மாங்கனிகள் அவன் அனுப்பியவை. இருந்தும், கணவன் இல்லாத நேரத்தில் அம்மையார் விருந்தளித்தலும், அவன் அனுப்பிய மாங் கனிகளை அவனைக் கேளாமல் எடுத்துப் பரிமாறுதலும், அவற்றைக் கணவன் உண்ணவேண்டும் என்று விரும் பாமல் அதைவிட இந்த விருந்து உண்ணுதல் மேல் என்று துணிதலும் மாதர்கட்கு வாழ்க்கையில் இருக்கும் உரிமை யைப் புலப்படுத்துகின்றன; சிறந்தது துணிந்து செய்தலின் சிறப்பையும் எடுத்துக் காட்டுகின்றன. தம் கணவன் உண்பதினும் ஒரு நல் விருந்து உண்பது மேல் என்னும் மிக அழகிய தந்நலமற்ற இல்வாழ்க்கைச் சிறப்பும் இனிது விளங்குகின்றது.

இச் செயல், கணவனுக்குப் பெருநலம் புரிந்ததாக ஆகுமல்லது, மாறு செய்ததாக ஆகாது. அம்மையார் நடத்திய இந்த இல்லறத் திறன், ஏனை மாதரார்க்கு இனிய தோர் எடுத்துக் காட்டாகும். எது நனி நாகரிக வாழ்வு என்பதை இது புலப்படுத்தும்.

இருப்பவல்

[கி. வா. ஜகந்நாதன்]

அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ், பாகுந் தேனும் கலந்தாற் போலச் சந்த இசையும் தண்டமிழ் நயமும் செறிந்தது. முருகனுடைய திருவருளைத் துணைக் கொண்டு அவனுடைய ஆணையின்படியே பாடியது திருப் புகழ் என்பதைத் திருப்புகழ்ப் பாடல்களிலுள்ள சில பகு திகளே தெரிவிக்கும்.

செகத்தி யாவும் வேறாக நிகழ்ச்சி யாம நோதித
சிவச்சொ ரூப மாயோகி யெனஆள்வாய்.

ஒரு பாடலில் தாம் திருப்புகழைப் பாடும்படி முருக வேள் அநுக்கிரகம் செய்ததை மறவாமல் பாராட்டுகிருர். அங்கே திருப்புகழின் பெருமையை அவரே விரிவாகச் சொல்கிருர். "நாலு திசைகளிலும் உள்ள பக்தர்கள் மகா அற்புதம், அற்புதம் என்று பாராட்டுகிருர்கள். சித்திர கவி வகைகளில் ஒன்ருகச் சேரும் இயல்புடையது. இனிய சந்தம் மிக்கது. இத்தகைய திருப்புகழை அடியேனைச் சொல்லும்படியாக வைத்து, அது எங்கும் பரவும் படியாகச் செய்த பேரருளை நான் என்றும் மறவேன்" என்று சொல்கிருர்.

"..... ......பூர்வ பச்சிம தட்சிண உத்தர திக்குள
 பக்தர்கள் அற்புதம் — என ஓதும்
சித்ரக வித்துவ சத்த மிகுத்த
 திருப்புக ழைச்சிறி — தடியேனும்
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
 சித்த அநுக்ரகம் — மறவேனே"

அது "மனத்தையும் உருக்கும்" என்று மற்ருேரிடத்தில் கூறுகிருர்.

திருப்புகழின் இனிமையையும் உயர்வையும் வேறு பல புலவர்கள் பாராட்டியிருக்கிருர்கள்.

"அருணகிரி சொரி கவிதை
 யமுதம்"

என்று அந்தகக்கவி வீரராகவ முதலியார் பாடுகிருர்.

"உதிருங் கனியை நறும் பாகில்
 உடைத்துக் கலந்து தேனைவடித்
தூற்றி அமுதி னுடன் கூட்டி
 ஒக்கக் குழைத்த ருசிபிறந்து
மதுரங் கனிந்த திருப்புகழ்ப்பா
 மாலை"

என்று திருமலைப் பிள்ளைத் தமிழ் ஆசிரியர் மிகச் சிறப்பாகப் பாராட்டுகிருர்.

காலனுடல் போடத் தேடிவரு நாளிற்
காலைமற வாமற் புகல்வேனே.

சந்தப் பாடல்களாக இருப்பதால் தாளத்தோடு பாட ஏற்புடையவை திருப்புகழ்ப் பாடல்கள். இருபது முப்பது ஆண்டுகளாகவே திருப்புகழ் தமிழ் நாடெங்கும் ஓங்கிப் பரவிவருகின்றது. இசை நயமும் இலக்கியச் சுவையும் வெளிப்படப் பாடுவாரும் பொருளுரைப்பாருமாகப் பலர் இப்போது இருக்கின்றனர்.

திருப்புகழை ஒரே மாதிரி இசையோடு கட கட கட வென்று முன்காலத்தில் சிலர் சொல்வதுண்டு. மலையருவி விழுவது போலவும் ரெயில் வண்டி ஓடுவது போலவும் அவர்கள் பாடுவார்கள். பாட்டின் சொற்கள் தெளிவாகக் காதில் விழாவண்ணம் பாடுவார்கள். அவர்கள் பாடு வதைக் கேட்டால் "திருப்புகழ் மிகவும் கடினமானது போலும்!" என்று தோன்றும். பலர் அப்படியே நினைத்த காலமுண்டு. நல்லவேளையாக ஸ்ரீ வள்ளிமலை ஸ்வாமிகள், ஸ்ரீ திருப்புகழ் மணி ஐயரவர்கள், ஸ்ரீ கிருபானந்த வாரி யாரவர்கள் முதலியோர் இசையோடு நல்ல முறையில் திருப்புகழ்ப் பாக்களைப் பாடித் தமிழ் மக்களின் உள்ளத் தில் இருந்த இந்தப் பயத்தைப் போக்கிவிட்டார்கள்.

"சுக்குமொ—ளகுதிப்—பிலி" என்று பிரித்துக் கொலைபண்ணுபவர்கள் எந்தப் பாட்டைப் பாடினாலும் பொருள் விளங்காதபடியே பாடுவார்கள். திருப்புகழைப் பாடி வந்த பழைய கால பக்தர்கள், தம்மை அறியாமலே அதன் சந்தத்தைப் பெரிதாக்கிக் காட்டினார்கள். இதனால் தமிழ்மக்களில் பலர் திருப்புகழ் இரும்புக்கடலை என்று நினைத்ததில் தவறு இல்லை. சந்தப்பாக்களாகிய திருப் புகழை இயற்றுவது அருமையே அன்றி, படித்துப் பொரு ளறிவது எளிது. எல்லாத் திருப்புகழும் எளிதிலே பொருள் அறியும் வண்ணம் இருக்கின்றன என்று நான் சொல்ல

பாடு பட்டுபு முக்கொள்ம லக்குகை
வீடு கட்டியிருக்குமெ னக்குநின் அருள்தாராய்.

வரவில்லை. கம்பராமாயணத்திலே கூடப் பொருள் விளங்காத பாடல்கள் பல உண்டு. இன்னும் புலவர்கள் பொருள் வரையறை செய்வதில் ஒருமுகப் படாத பாடல்கள் உண்டு. அவற்றைக் கம்ப சூத்திரம் என்று சொல்வார்கள். எல்லா நூல்களிலும் இத்தகைய கவிகள் இருப்பது இயற்கை. ஆகவே திருப்புகழிலும் பொருள் எளிதில் விளங்காத சில பாடல்கள் இருப்பது ஆச்சரியம் அன்று. அது கொண்டு திருப்புகழ் முழுவதும் கடினம் என்று சொல்வதுதான் பொருந்தாது.

எப்படியோ, திருப்புகழ் கடினமானது என்று முன்பு ஒரு கருத்துப் பரவியிருந்தது. அதோடு திருப்புகழில், " இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர் இடுக்கினை யறுத்திடும் " என்ற அடி ஒன்று வருகிறது. அதைச் சிலர் எடுத்துக் காட்டி, " அருணகிரிநாத ஸ்வாமிகளே திருப்புகழ் இரும்பினால் பண்ணின அவலைப் போன்றது என்று ஒப்புக் கொள்கிறாரே. நாங்கள் இருப்புக் கடலை என்று சொல்கிறோம். எங்கள் கருத்தில் என்ன தவறு இருக்கிறது?" என்று கேட்டார்கள். இன்னும் பலர் " இருப்பவல் திருப்புகழ் " என்ற தொடர் திருப்புகழ் அன்பில்லாதவர்களுக்கு இரும்பு அவலைப்போலக் கடினமாக இருப்பது என்று பொருள் செய்கிறார்கள்.

" இருப்பவலைப் போன்ற திருப்புகழை யார் விருப்பத்தோடு படிக்கிறார்களோ அவர்களுடைய துன்பங்களை அது அறுத்துவிடும் " என்ற பொருள்பட, " இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர் இடுக்கினை அறுத்திடும் " என்று அருணகிரிநாதர் பாடியிருக்கிறார்.

"விருப்பொடு படிப்பவர்" என்பதைக் கவனிக்கவேண்டும். இரும்பு அவல்போல இருந்தால் அதை விரும்பிப் படிப்

மெய்வீடு பரம சுகசித்தி இந்திரிய
தாபசபல மறவந்து நின்கழல் பெறுவேனே.

பவர் யார் இருப்பார்கள்? பிற இடங்களில் திருப்புகழைப் பாராட்டிய முறைக்கும், இங்குள்ள முறைக்கும் மாறு பாடு இருப்பதாகக் கொள்வது பொருந்துமா? மதுரங் கனிந்த பாமாலை என்று பிற புலவர்கள் பாடியிருக்கிறார் கள். அதற்கும் மாறாகத் திருப்புகழை இரும்பு அவல் என்று சொல்லலாமா?

இவற்றையெல்லாம் யோசிக்கும் பொழுது, இருப் பவல் என்ற தொடரே அங்கே இருப்பது தவறு என்று தோற்றுகிறது. தொடர் தவறு என்று கொள்வதைவிட அதற்கு நாம் கொள்ளும் பொருள் தவறு என்று சொல் வதுதான் நியாயமானது. அப்படியானால் திருப்புகழின் சிறப்புக்கு ஏற்ற வகையில் எப்படி அர்த்தம் பண்ணு வது?

இருப்பவல் என்ற தொடரை இரும்பு—அவல் என்ற இரண்டு சொற்களாகப் பிரிப்பதனால்தான் இந்தச் சங் கடம் வருகிறது. அதை விட்டு விட்டு, இருப்பு + அவல் என்று பிரித்துப் பார்க்கலாம். இருப்பு என்பது கையிலே இருப்பது; சேமித்து வைத்தபொருளுக்குச் சொல்லும் வார்த்தை அது. கையிலே சேமித்து வைத்திருப்பதாகிய அவல் என்று அத்தொடருக்குப் பொருள் கொள்ளலாம்.

உணவு வகைகளில் சமைத்த ஆகாரங்களை ஒரு நாளுக்குமேல் வைத்துக் கொள்வது நம்முடைய வழக்க மன்று. ஆனால் யாத்திரை செய்கிறவர்கள் தம்முடைய பசியைப் போக்கிக்கொள்ளப் பொரிமாவையும் அவலையும் கொண்டு போவார்கள். யாத்திரை போகிறவர்களுக்கு இன்றியமையாத பொருள்களில் அவலும் ஒன்று. பெருங் கதை என்ற பழைய தமிழ் நூலில் அவலை "ஆத்திரைத் தருப்பணம்" என்று ஆசிரியர் சொல்கிறார். ஆத்திரை

ஜெபதப நேசித் தார வார பரிபுர
பாதத் தாளு மாறு திருவுள நினையாதோ.

என்பது யாத்திரையைக் குறிப்பது. தருப்பணம் என்பது அவலுக்குப் பெயர். யாத்திரை செய்பவர்கள் சமயத்தில் தம் பசியைத் தீர்த்துக்கொள்ளத் துணியில் அவலை முடிந்து வைத்துக்கொள்வார்கள். பல நாள் வழி நடந்து சென்று துவாரகையை அடைந்து கண்ணபிரானைக் கண்டு அளிப்பதற்குப் பலநாளும் கெடாமல் இருக்கும் அவலையல்லவா குசேலர் எடுத்துச் சென்றார்.

அவல் மிகவும் சுலபமான உணவு. தனியே உண்ணலாம். நீரிலே ஊறவைத்து உண்ணலாம். மோரிலிட்டு ஊறவைத்தோ, வெல்லம் போட்டோ உண்ணலாம். மீட்டும் பக்குவம் செய்து புளியவல், வெல்லஅவல் முதலிய உருவத்தில் உண்ணலாம். ஏழை முதல் பணக்காரர் வரையில் தங்கள் ஆற்றலுக்கு ஏற்ப அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். செல்வர் வீட்டு விருந்தில் அவல் பாயசம் சிறப்புத் தருவதைச் சுவை கண்டவர்கள் அறிவார்கள்.

திருப்புகழ் சேமித்து வைத்த அவலைப்போன்றது: கையிருப்பிலே உள்ள அவலைப் போன்றது. மடி, ஆசாரம் முதலிய நியமங்களோடு ஓதும் மந்திரங்களைப் போலன்றி எந்தச் சமயத்திலும் யாரும் ஓதலாம். காலன் ஊர்க்கும் செல்லும் நெடுவழிப் பிரயாணத்தில் உபயோகப்படும் அவல் அது. அதை இசையின்றியே பாடலாம், தனி அவலைச் சுவைப்பது போல; கைத்தாளம் கொட்டிப் பாடலாம், வெல்லத்தைக் கடித்துக் கொண்டு அவலை உண்பது போல: இசையோடு பாடலாம், ஊறவைத்த அவலை உண்பது போல, தக்க பக்க வாத்தியங்களுடன் பெரிய கச்சேரியாகச் செய்யலாம், அவல் பாயசம் பண்ணுவது போல.

அவல் எப்படி எளியதாகவும், இனியதாகவும், சமயத்துக்கு உதவுவதாகவும் இருக்கிறதோ, அப்படியே

ஒருஇசை சுருதிபுடைதர வருமிரு பரிபுர
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே.

திருப்புகழும் இருக்கிறது. கவியின் அமைப்புக்கு உண்ணும் பொருள்களை உவமை கூறுவது மரபு. மிகவும் கடினமான பாக்களுக்குத் தேங்காயை உவமை கூறுவார்கள், அத்தகையை கவிகள் நாளி கேர பாக முடையவை என்பார்கள். மாம்பழச் சுவைபோல அமைந்த சஹகார பாகமும், திராட்சா பாகமும், இட்சு (கரும்பு) பாகமும், க்ஷீர (பால்) பாகமும் என்று செய்யுட்பாகங்கள் பல உண்டு. உண்ணும் கனியையும் அமுதத்தையும் பாக்களுக்குப் பிறர் உவமை கூறினர். அருணகிரிநாதர் மற்றவர் கூறியதையே கூருமல் புதிதாக அவலைக் கூறினார். தொப்பையப்பனைப் பாராட்டும்போது கரும்பும் கனியும் உண்பவர் என்பதோடு அவலையும் உண்ணும் விருப்பம் உடையவர் என்று அருணகிரிநாதர் சொல்கிறார்.

" கைத்தலம் நிறைகனி
அப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுகன் "

என்றும்,

" இக்கவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடன் நெய்
எட்பொரி அவல் துவரை இளநீர் வண்
டெச்சில் பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழம் இடிப்பல்வகை தனிமூலம்
மிக்க அடிசிற் கடலை பட்சணம் எனக்கொள்
ஒரு விக்கின சமர்த்தன் "

என்றும் பாடும்போது அவலை மறக்கவில்லை. அது அவர் நினைவில் இருக்கும் பொருள். ஆகவே அந்த அருமையான,

---

இனியு னடியரொ டொருவழி படஇரு
தமர பரிபுர சரணமு மவுனமும் அருள்வாயே.

ஆனால் எளிதிலே உண்பதற்குரிய, பொருளைத் திருப்புகழுக்கு உவமை ஆக்கினார்.

அதில் அவருடைய விநயமும் புலப்படுகிறது. "நானும் அமுதம் தரவில்லை; கனி தரவில்லை. வெறும் அவல் தருகிறேன். இருப்பிலே வைத்திருக்கும் அவல் தருகிறேன். ஏழைகள் ஆண்டவனுக்குத் தருவது அதுதான் என்று குசேலர் காட்டியிருக்கிறார் அல்லவா? ஆகவே நானும் அவல் தருகிறேன்" என்று சொல்வது போல இருக்கிறது. அந்த உபமானம்.

ஸ்ரீவைஷ்ணவர் செல்வம்.

ஆரும் பை (V. S. வெங்கடராமன்)

முதற் காசு:—பெற்றோருக் கல்லவோ குழந்தையன்பு தெரியும். நந்தகோபர், தங் குழந்தைக்கு எங்கே அபாயம் வந்துவிடுமோ" என்ற பயத்தோடு, வசுதேவர் சொல்வதும் உண்மையாகலாமே என்றெண்ணிக் கொண்டே 'ஸ்ரீ ஹரிதான் சரணம்' என்று ஜபிப்பவராய்க் கோகுலத்திற்கு வந்துகொண்டிருந்தார்.

இரண்டாங் காசு:—நல்லது நடக்காத இடத்தைத் தீமை தேடியே வரும். கம்ஸன் கட்டளையால் பூதனை என்ற குழந்தைக் கொல்லிப் பேய்மகள் ஒருத்தி புறப்பட்டாள். பட்டினம், சிற்றூர், இடைச்சேரி முதலான இடங்களிலெல்லாஞ் சுற்றி அலைந்தாள். பல குழந்தைகளைக் கொன்ற பாவங்களெல்லாவற்றையுந் தான் ஒருத்தியே யாகக் கொட்டிக் கொண்

அவசமுடன்மல ரடிதொழுது உருகிய பெருமானே
மவுன சிவசுக சலதியில் முழுகுவது ஒருநாளே.

டாள். பல குழந்தைகள் எங்கும் மாண்டன. எங்கெல்லாம் பகவந் நாம ஸங்கீர்த்தனம் முதலாயின செய்யப்படவில்லையோ அங்கெல்லாம் பேய் மகளிரும் அரக்கிமாரும் உலாவத் தொடங்காமலென்ன செய்வர்? பேய் மகளிரையும் அரக்கிமாரையும் ஒழிக்கும் நல்வினைகள்தாம் அங்குச் செய்யப்படுவதில்லையே.

மூன்றுங் காசு :—வந்தவள் மகாலக்ஷ்மி தானே! அந்தப் பூதனை கோகுலத்தில் ஆகாயவழியே வந்து குதித்தாள். தெய்வமங்கையாக மாறுவேடம் பூண்டாள். எங்கும் போகவும் எவ்வடிவங் கொள்ளவும் அப் பேய்மகளிருக்கு ஆற்றலுண்டல்லவோ!

கொண்டை பொம்மென உட்செருகி வெளியில் தெரியவுஞ் சூடிய மல்லிகை மாலை ஒருபுறமும், நுண்ணிடைக்கும் இடமில்லாமற் செய்த பின் தட்டு ஒருபுறமும் கொத்துத் தனம் ஒருபாலும், அழகான கம்மல்கள் இருபுறமும், கரிய அளகபாரமும், மோகனப் புன்னகையும் மின்னும் புடைவையும், ஜொலிக்கும் ரவிக்கையும், கொல்லும் பார்வையும், கடைக்கண் வெட்டும், கையில் தாமரைப் பூவுங் கவின்செய இத்தகைக் கோலத்தைக் கண்ட ஆய்ச்சியரெல்லாரும் "இவளுமோர் இடைச்சிதான்போலும்' "மகாலக்ஷ்மி போலிருக்கிறாளே" என்றெண்ணிச் சந்தேகியாதிருந்து விட்டனர். புறத்தோற்றம் யாரைத்தான் ஏமாற்றுதல் செய்யாது.

நான்காங் காசு :—மட சாம்பிராணிகட்கு வெளிச் சாம்பல் தானே தெரியும். அப்பூதனை மோகினி அவ்

அருணைகர்மிசை கருணையொ டருளிய
பரம வொருவச னமுமிரு சரணமு மறவேனே.

வாயர் பாடியில் குழந்தைகளைத் தேடிக் கொண்டே வந்து தற்செயலாக நந்த கோபர் வீட்டில் தொட்டிலிற் கிடக்குங் குழந்தையைக் கண்டாள்.

ஐந்தாங்காசு :—கண்கள் முகிழ்த்தமைக்குக் காரணம் யாதோ? பூதனைப் பார்க்கும்போது நந்த கோபன் குழந்தை முக்கால் மாதமே நிரம்பிய அப்பருவத்தில் கண்களை மூடிக் கொண்டது. அவ்வாறு செய்து கொண்டது இப்பூதனையால் உயிர்கட்கு மரணமினி நேர வேண்டா மென்பதற்கோ! பொல்லாதவளைக் காணவுமாகா தென்பதற்கோ! தன்னை யிவளறிய வேண்டா மென்பதற்கோ! அன்றி வயிற்றிலிருக்கும் உயிர்க்கருப் பிண்டத்தினுக்கு முதலில் உண்டாகும் உறுப்புக் கண்ணல்லவோ! இக்கண்ணை முகிழ்த்து நானிருக்க "முதல்வனையானே உலகனைத்தையும் மறைத்துள்ளேன்" என்பதை இப்பூதனை அறியட்டுமே என்பதற்கோ! இனிமேலே அருச்சுனன் வரும் வரைபொய்த் துயில் கொண்டிருந்து துரியோதனனுக்கொரு தந்திரஞ் செய்துகாட்டப் போவதற்கு இது ஆரம்ப சூசனை என்பதற்கோ. யாது யாம் அறிவோம்.

ஆறாங் காசு :—உறைக்குள் மறைந்த கத்தி. அப்பூதனை "பழுதை யென வெண்ணி ஒருவன் தூங்கும் பாம்பை மடியிற் கொண்டது போல்" நந்த கோபன் மகனை மடியிலெடுத்துக் கொண்டாள். உண்மைத் தாயும் தோல்வியுறக் காட்டுந்தன் பொய்யன்புச் செயல்களால் பார்த்துக் கொண்டிருக்கும் யசோதை

மருடமணி வாரி சைக்கும் விகடமத லாவு சித்ர
மயிலின் மிசை யேறி நித்தம் வரவேணும்.

யையும் உரோகிணியையும் அப்பூதனை உறைக்குள் மறைத்த கத்தியென இருந்து வஞ்சித்து விட்டாள்.

ஏழாங் காசு:—பால் குடிப்போன் பால் கொடுப்பனோ. அப்பூதனை அரனுண்ட ஆலாகல விடத்தினுங் கொடிய நஞ்சைப் பாலுடன் சுரக்கச்செய்து கொண்டு அவ்யசோதை பாலனுக்குத் தாய்ப்பாலூட்டினள். அந்தயசோதை பாலனும், அப்பூதனை விடு, விடு, போதும் போதும் என்று கூக்குரலிட இருகைகளாலும் கோபத்துடன் அப்பூதனையின் ஆவியோடே பாலையும் உறிஞ்சினார். அச்சமயத்து அப்பூதனை உடலெல்லாம் வேர்த்தாள்—அழுதாள், விழி பிதுக்கினாள். கைகளையுங் கால்களையும் உதறினாள். வலிபொறுக்காமற் கத்தினாள். கத்தின சத்தத்தால் விண்ணும் மண்ணும் நடுநடுங்கின. மனிதரெல்லாரும் மயங்கி விழுந்தனர். கூந்தல் அவிழ்ந்து பரந்தது. கைகளையும் கால்களையும் நீட்டியே அவள் வாயைப் பிளந்தாள்.

யசோதைபாலனோ பயமேயறியாது அவ்வரக்கியின் மார்பில் விளையாடி நின்றான். கோபிகைகள் ஓடிவந்து குழந்தையை எடுத்தார்கள். யசோதையும் உரோகிணியும் கோபிமாரோடுகூடிக்கண் மிச்சில் போக்கிக் குழந்தைக்குக் காப்பிட்டனர். பசுவின்வால் நுனி முடிக்கற்றையால் குழந்தையின் நான்கு பக்கங்களிலும் தடவினர். கோமூத்திர கோதூள்களால் குழந்தையை நீராட்டினர். பிறகு பசுவின் சாணத்தால் குழந்தையின் நெற்றி தொப்புள், இருதயம், நெஞ்சாங்குழி, வலப்புறவயிறு, வலப்புறத்தோள், கழுத்து

நினைவினொடு பீலி வெற்றி மரகத கலாபசித்ர
நிலவுமயி லேறி யுற்று வரவேணும்.

இடப்புறவயிறு, இடப்புறத்தோள், கழுத்துமேலிடம் இடுப்பு, புறக்கழுத்து என எண்ணப்பட்ட இப்பன்னிரண்டிடங்களில், கேசவ நாராயண மாதவ கோவிந்த விஷ்ணோ மதுசூதன த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷிகேச பத்மநாப தாமோதர என முறையே இப்பன்னிரு திருநாமங்களையுங் கூறித்திலக மிட்டனர்.

பிறகு யசோதை தன்குழந்தைக்குப் பால்தந்து படுக்கையிற்றுயில வைத்தனள். அந்த நேரத்தில் தான், மதுரையிலிருந்து கோகுலம் வந்த நந்தர் முதலிய இடையர் பூதனையின் சரீரத்தைக் கண்ணுற்று மிகவியந்தனர். வசுதேவர் சொன்னது பலித்ததே. முனிவராகவோ மகாஞானியாகவோ தான் அவரிருக்க வேண்டும் என்றனர். பிறகு அவ்விடையர் பலர் பல கோடரிகளை எடுத்துப்பல வெட்டுக்களிட்டு ஒவ்வோர் உறுப்பையும் வேறு வேறிடங்களில் இட்டுத் தனித்தனி விறகு களையடுக்கி மறைத்து எரித்தனர்.

அப்பூதனையுடல் கண்ணனால் பாலுறிஞ்சப் பெற்றது. ஆதலால் அவ்வுடல் எரியும்போது நாற்புறமும் காரகில்மணம் கமழ்ந்தது. நல்லவாசனை கம்மென வீசிற்று. கொல்லும் நினைவுடன் வந்தவட்கே, நற்கதி கிடைத்தது, ஆக, பாயசம் முதலான வற்றைக் கண்ணனுக்குச் சிரத்தையோடும் பக்தியோடும் நிவேதிப்பவர்க்கு நற்கதி கிடைப்பதில் ஏது தடையுண்டு. செவிலித்தாயர் உறும் நற்கதியை அப்பூதனையும் கண்ணனையடைந்து, பெற்றாள், என்றால், அக்கண்ணனுக்குப் பாலுதவிய பசுக்கள் நற்கதியடையும் எனச்

தாழ்விலுயிர் வீழ்பட் டேழ்வினைவி டாமற்
சாவதன்மு னேவற் கொண்டிடாயோ.

சொல்லவும் வேண்டுமோ. நற்றுயரும் நற்கதியடை யாது பின்னெக்கதியடைவர். அந்நற்கதி பிறவித் துன்பம் நீங்கலாகிய வீட்டின்பப் பேறடைதலே. தன்னை வணங்கினவர்க்குக் கண்ணன் தாய்ப்பால் மறுமையிலுண்ணக் கொடுப்பானோ? ஒருபோதுங் கொடான் அல்லவோ. பிறகு நந்தர் கோகுலம் வந்து நடந்தன வெல்லாங் கேட்டுக் குழந்தைக் கண்ணனை வாரியெடுத்து உச்சிமுகர்ந்து பரமானந்தம் அடைந் தனர்.

குறிப்பு:—கண்ணன் பூதனையின் பாலுண்டது என்ற இவ்வரலாறு ஐம்பெரும் பாவங்களுள் ஒன்று கிய கள் மாந்தும் பாவத்தைப் போக்குவதென்று லீலாசுகயோகீந்திரர் கிருஷ்ணகர்ணாமிருதத்தில் "யத் பூதனாஸ்தனபய; மதுபான தோஷம் ஹரதி" என்னுந் தொடரால் திருவாய்மலர்ந்தருளியுள்ளார். அத்தகைய சிறப்புவாய்ந்தது இந்தப்பூதனை மோக்ஷம் என்ற புண்ணிய கதை.

ஔவைப் பிராட்டியார்

(இதழ் 5, 32-வது பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் யாவரும் வேண்டிய அந்த மோனம்தான் யாதுவெனில் " வாக்கு மனமும்இறந்திட்ட இடம் மோனமாம்"; அதாவது மோனம் என்பது, வாய்மூடி மௌனமாயிருத்தல் அல்ல, பின்னர், கருவிகள் யாவும் அவற்றின் செயல்களை

தனைவாடிவேலைச் சேவல்தனை யேனற் சாரல்மற மானைச் சிந்தியேனே.

அறிவேயொழிந்து, மனமும் தனது மாயைத் தொழிலையொழிந்து சும்மாயிருத்தல் என்ற அந் நிலையே எனத்திருமூலஸ்வாமி விளக்குகிறார். மேலே கூறியவாறு, சிந்தையொழிந்து, நினைப்பு மறப்பு அற்று கருவிகள்செயல்களற்று மனம் செம்மைப்பட்டு ஏகநாயகரிடம் அர்ப்பணம் செய்து நின்ற இம்மகான் கட்கு மேற்கொண்டு என்ன ஞானம் ஏற்பட்டது? எந்தப் பேரின்ப எல்லையைக் கண்டு ஆனந்தித்தார்? எனில், சும்மாயிருந்து "யான்கண்டது நமது முருகன் தனிவேலன், முனி, நம்குரு" என்கிறார் அருணகிரி யார். அல்லும் பகலும் சும்மாயிருந்து யாம்கண்டது என்ன

"ஞான நெறிக்கேற்றகுரு, நண்ணரிய சித்தி முத்தி
  தானம் தருமந்தழைத்தகுரு, மானமொடு
தாயெனவும் வந்தென்னைத் தந்தகுரு, என்சிந்தை
  கோயிலென வாழுங்குரு"

அதாவது மோனநிலையிலிருந்து யான்கண்டது என்குருவே, அவரே என் நெஞ்சில் வாழ்கிறார் பின் ஆவனவற்றை அவரே செய்வர் என்ற இவ்வரிய உண்மையை அறிந்தேன் என்கிறார் தாயுமான ஸ்வா மிகள்.

தாம் மௌனமாக இருந்தது அடைந்தது யாதெனில்,

"சாவாமற் செத்திருந்து சற்குருவின் பொன்னடிக்கீழ்
  வேவாமல் வெந்திருந்தேன்"

கருணை வாரிதியே! இரு நாயகி கணவனே
உன தாளிணை மாமலர் தருவாயே.

அதாவது அவரது கருவிகள் யாவும் செயலற்றன. சீவன்மட்டில் போகவில்லை. தன் நெஞ்சத்தில் தம் குருவாகியதணல் கலக்க, தன் நெஞ்சம் வேக, வெந்த இரண்டும் கலந்தன, அதாவது ஐக்கியப்பட்ட நிலையை அடைந்தது அவர்மனம். சரீரம் வேகவில்லை, என்கிறார் பட்டினத்தடிகள்.

இப்படியாக மோனம் வந்த பின்பு ஞானசற்குருவை நெஞ்சிலேயடைந்து, சித்தி முத்திகளையடைந்ததாக யாவரும் கூறியிருக்கிறார்கள். இதையே

"மோனம் வந்தோர்க்கு முத்தியும் கைகூடும்
மோனம் வந்தோர்க்கு சித்தியும் முன்னிற்கும்"

(திருமூலர்)

அதாவது மோனநிலை கைகூடியவர்கட்கு முத்தி, சீவன்முத்தி, கைகூடும், சடம் அழியாது, பலவித சித்திகளும் அவர் முன்னே நிற்கும், அதாவது சிந்தித்த அளவில் பெற்று விடுவார்கள் என்று திருமூல ஸ்வாமியும் சொல்லியிருக்கிறார்.

இத்திறப்பட்ட ஆழ்ந்த கருத்துக்களை, மோனம் கைகூடினால் ஞானத்தின் எல்லையை அடையலாம், அதனின்றும் சித்தி முத்திகள் பெறலாம், அதாவது மோனநிலை ஞான நிலையையில் சேர்க்கும். அந்த ஞானமோவெளியில் ஐக்கிய நிலையில் சேர்க்கும் என்பதாகத் தெரிவிக்க வேண்டி, நமது ஔவைப் பிராட்டியும் நான்கே வார்த்தைகளில்

கலைகொடு பலதுன்பமும் அகலிட நின்
கழலிணை கருதும் படிபாராய்

" மோனமென்பது ஞானவரம்பு"

(மோனநிலையென்பது ஞானத்தின் எல்லையை அடைய ஓர்சாதனம்) என்று வெகு அழகாகக் கூறியிருக்கிறார்.

ஔவைப் பிராட்டியார் ஓர் சிறந்த ஞானி, யோகியென்று கூறப் பலசான்றுகள் உள. முக்கியமாக அவர் பாடியுள்ள "ஞானக் குறள்" என்ற நூலே போதுமானது. இதை அன்பர்கள் இதுகாறும் கண்ணுறுவிடில், இனியாவது கண்ணுற்று உண்மை ஞானம் அடையுமாறு பிரயத்தனிக்கட்டும்.

இனி அடுத்ததாக, யோகிகட்கும் ஞானிகட்கும் வயித்தியம் வருமா, அல்லது வயித்தியற்குத்தான் யோகம் ஞானம் அவசியமா, அவ்வாறாயின் நமது ஔவைப் பிராட்டிக்கும் வயித்தியம் வருமோ? அதைப்பற்றி அவர் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாடியுள்ளாரோ என்பதைப் பற்றி கவனிப்போம்.

ஔவைப் பிராட்டியார் ஓர் சிறந்த ஞானியும் யோகியும் ஆவார் என்று முன் சஞ்சிகையில் கூறப்பட்டது. இனி ஞானிகட்கும் யோகிகட்கும் வயித்தியமும் தெரியுமா? அதைப்பற்றி அவர்கள் பாடியுள்ளனரா? என்பதை கவனிப்போம்.

அறநூல்களாகிய உபநிடதங்களை இயற்றியுள்ள ரிஷிகளும் யோகிகளும் வைத்தியத்தைச் சொல்லி இருக்கிறார்கள். உதாரணமாக உபநிடதங்களுள் முக்கியமான ப்ரஹ்தாரண்ய உபநிடதத்தின் கர்த்தா

கலகமும் வருமுன் குலவினை களையும்
கழல் தொழு மியல்தந்து அருள்வாயே.

யோகி யாக்ஞவல்கியர் தான் இயற்றியுள்ள "யாக்ஞ வல்கிய சம்ஹிதை" யென்னும் நூலில், பிண்டோற் பத்தி, ஜீவோற் பத்தி, முதலியவைகளையும் சிகித்சா விதிகளையும் கூறி இருக்கிறார். கைவல்யம், முதலிய உப நிடதங்களின் கர்த்தாக்கள் "சரீர உபநிடதம்" கற்போக "உப நிடதம்" முதலியவற்றில் உற்பத்தி சரீர உற்பத்தி, ரோக நிவர்த்தி முதலியவைகளைப் பற்றிக் கூறியிருக்கிறார். பதினெண் சித்தர் முதல், எல்லா சித்த முனிகளும் ஞான யோக சாஸ்திரங்கள் பாடி இருப்பதுடன் நில்லாது, எல்லையற்ற அளவில் வைத்தியமும் பாடி இருக்கிறார்கள். இவர்களில் "தன்வந்திரி" பகவானும் ராமதேவ சிவயோகியும்

"கேளப்பா வைத்தியற்கு யோகம் வேண்டும்
சிவன் மேல் இரக்கம் வேண்டும்
நீதியுடன் கடவுளைத்தான் பணிந்து கொண்டு
நிச்சயமாய் மருந்து வகை ஈவார் பாரே"

என்று வைத்தியர் லட்சணம் கூறியிருக்கிறார்கள். அகத்திய மாமுனியோ எனில், "ஆதியென்ற வைத்தி யம்தான் பிரும்ம வித்தை, ஆத்துமாவை ரக்ஷித்தால், அவனே சித்தன்". அதாவது வைத்தியம் ஓர் சாதா ரண காரியம் அல்ல, பிரும்ம வித்தைக்கு ஒப்பானது. நோய்வாய்ப்பட்டவரைக் காப்பாற்றல் சித்தர்கள் லட் சியங்களில் ஒன்றாகும். என்று கூறுகிறார்.

அருணகிரிநாதரோவெனில் முருகரின் புகழைப் பற்றிப் பாடியதுடன் நில்லாது அவரது திரு வகுப்புக் களைப்பற்றியும் பாடியுள்ளார். அவற்றுள் "சித்து

கருத்தா வெனக்குத் திருத்தா எளித்துக்
கலைப் போதகத்தைப் புகல்வாயே.

வகுப்பு" என்ற தலைப்பில் ஜீவ மூலிகைகளைப் பற்றியும், கற்ப மூலிகைகளைப்பற்றியும் பாடிவிட்டு அவற்றைத்தாம் தமது குருநாதரிடம் பெற்றதாகவே சொல்கிறார். மேலும் அத்தகைய ஜீவ மூலிகைகளின் குண குணங்களை உள்ளவாறு உணர்ந்து பயன்படுத்துபவர்கள் சித்தர்கள் எனப்படும் முனிவர்களுக்கு ஒப்பாவர் என்றும் கூறுகிறார்.

கீதையில் பகவான் பலவித யோகங்களைப் பற்றிக் கூறியிருப்பதுடன் (பதினேழாம் அத்தியாயத்தில்) ஆகார பேதங்களையும் அவற்றுள் நோயிலா வாழ்விற்கு உரிய ஆகாரங்களையும் மற்றும் நோயற்ற வாழ்வை அடைந்திருத்தலின் அவசியத்தையும் விதிகளையும் (வைத்தியம்) கூறி இருக்கிறார்.

யோகம் ஞானம் அடைந்தவர்கள், "சுவர் இருந்தாலன்றி சித்திரம் எழுத ஏதுவில்லை என்பதைப் போன்று சரீரதிடம் இருந்தாலன்றி, யோகமும் ஞானமும் வாய்க்க இயலாது" என்பதைக்கருதி, இச்சரீரம் நோய்வாய்க்குட் படாமல், ஆரோக்கியமாக இருத்தலின் அவசியத்தையும் அவ்வாறு நோயற்றவாழ்வுடனிருக்கும் விதிகளையும், அவ்விதிகளை அனுட்டித்தும், பல காரணங்கள் நிமித்தம் நோய்கள் வரின் அவற்றைக் குணப்படுத்திக்கொள்ளும் மார்க்கங்களையும் ஜீவராசிகளின் மேலுள்ள இரக்கத்தினால் வைத்திய சாஸ்திரங்களாகப் பாடியுள்ளனர்கள் என்பதற்கு மேலும் பல சான்றுகளும் உள.

எரிவாய் நரகிற் புகுதாபடிக்கு
இரு பாத மெனக்கு அருள்வாயே.

இனி அத்தகைய யோகமும் ஞானமும் அடைந்த நமது ஒளவைப்பிராட்டியார் கூறியுள்ள வைத்தியம் தான் யாது? நேர்முகமாகச் சொல்லாமல் மறைமுக மாக ஆழ்ந்த பொருள்களை அமைத்துப் பாடுவதில் நிபுணத்வம வாய்ந்த இவர் தமக்கும் வைத்தியம் தெரியும் என்பதை அறிவுறுத்த வேண்டி எளியநடை யில் பாடியுள்ளதைக் கவனிப்போம்,

1. மீதூண் விரும்பேல்-தேவைக்குமேல் உண்ண லாகா. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம் என்பதை யொப்ப போஜனவிதிப்படி முறையான, ஆகாரங்களை முறைப்படி உட்கொள்ளுதலே விதி யென்பதை அறிவுறுத்து கிறார்.

2. பாலோடாயினும் காலமறிந்து உண்—எளிதில் ஜீரணிக்கக்கூடிய பாலையே உட்கொண்டாலும் அஃதினை அகாலத்தில் உட்கொள்ளலாகா: இதுவும் போஜன விதியிலடங்கியது.

3. ஒத்த இடத்தில் நித்திரை கொள்:—மேடு, பள்ளமான இடமின்றி சமநிலத்தில் நித்திரை செய்க. தவிர பொதுத் தலங்களில் உறங்காது, தெரிந்த இடங் களில் நித்திரை கொள்க.

4. சனி நீராடு:—(a) சனிக்கிழமை தோறும் தவறாது முழுகுங்கள்.

(b) சனிக்கிழமை தோறும் குளித்து மறுதினம் (ஞாயிறு) ஓய் வெடுத்தலைக் குறிக்கும், மற்றும் உத்த மனை அன்று தொழுக என்பதனையும் குறிக்கும். (c)

உலகுடனேன்று கொண்ட கருமபிரான் தொழிந்து
உபய பதாம்புயங்கள் அடைவேனே.

மேலும் யாவருக்கும் தெய்வ வழிப்பாட்டை போதிக்கும் இவர் நவக்ரஹங்களில் ஒன்றாகிய சனி பகவானுக்கு அபிஷேகாதிகள் செய்வித்து இன்னல்கள் நீங்கப் பெறுவீர்களாக! என்பதையும் குறிக்கிறார். மேலும், வைகரைத்துயிலெழு, கோய்க்கிடங் கொடேல், பிரம்பேணில் பாரம் தாங்கும் முதலிய சொற்களினால் ஆழ்ந்த கருத்துக்களைத் தெரிவிக்கிறார்.

மேற்கூறிய நீதி மொழிகளில் அப்படிச் செய்யுங்கள், இப்படி இருங்கள் என்று சொல்லிவிட்டாரேயன்றி ஏன் கண்டிப்பாய் சனியன்று நீராடல் வேண்டும் நீராடாவிடில் என்ன, மற்ற கிழமைகளில் முழுகுவதைக் காட்டிலும், சனியன்று முழுகுவது எந்த வித உயர்ந்த நலனைக் கொடுக்கும் முதலிய கேள்விகளை ஆன்றோர்கள் ஆராய்ந்து அறியட்டும் என்று விட்டு விட்டார். ஆனால் இச்செய்யுட்களிலுள்ள அவசிய கருத்தை உத்தேசித்து அவைகள் இளமையிலேயே பழக்கத்தில் வந்துவிடவேண்டு மென்று கருதியும் சிறுவர்கட்கு ஓர் அறிய போதனைநூலாக ஏற்படுத்திவிட்டார். இவைகளிலிருந்து ஔவைப் பிராட்டியாருக்கு ஆயுர்வேதம் அதாவது வைத்தியமும் தெரியும் என்பது ஒருவாறு விளங்குகின்றது. மேலும் இதைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் விவரிப்போம்.

(ஸ்ரீவத்ஸன்.)

தருண மணிபொழி லருணை நகருறை
சயில மிசையினில் வரவேணும்.

சொற்பெரும் பொருட் கடல்

9 ஆம் முத்து

இச்சித்த சாரசுவதனது திருநாமங்களுள் கந்தனென்பதுவும் ஒன்று. அருணகிரியார் ஓதிய கந்த நாம சப்தங்களுள் ஒன்று மட்டுமே ஈங்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

"கந்தா முருகா கருணாகரனே." என்பதுவே அவ்வொன்று. வேதவியாசமுனிவர் "ஸ்கந்தத்வாத் ஸ்கந்ததாம் ப்ராப்த:" என்பர். உருக்கொண்டதாக விளையாடின போதே நெகிழ்ந்தான் ஆதலின் முருகன் ஸ்கந்தன் (கந்தன்) எனப் பெயர் பெற்றான். அவன் பகைவரிடமன்றோ இறுகுபவன். அன்பரிடம் நெகிழ்பவனும் நெகிழ்ந்தானும் ஆகிறவன்றானேயவன். தேவர்தம் துயரைக் கண்டு முதன் முதல் நெக்கு நெக்குருகினவன் அவனலாதுபின் யாரே.

10 ஆம் முத்து.

அம்முருகனது திருநாமங்களுள் கார்த்திகேயன் என்பதும் ஒன்று. உயிர்க்கரு வாறனையும் அதிஷ்டானமாக் கொண்ட அத் தெய்வக்கரு முதலில் ஆறாகத் தோன்றிப்பின் ஒன்றாகித் தெய்விக சரவணப் பொய்கையில் வளர்ந்து ஒரு பால—சூரியனாக அங்குக் கிருத்திகை முதல் அறுமாதர் அன்பினாலும் மகிழ்ச்சியாலும், தாய்ப் பாலை அப்பால சூரியனுக்கு ஊட்டிவளர்க்கப் பாலுண்டான் போலவும் விளையாடி அவ்வறு மாதர் மகனும் யானெனத்தன் தாயன்பு காட்ட அம்முருகன் கார்த்திகேயன் எனத் திருநாமஞ்சூட்டிக் கொண்டான். என்னே அவன் தாயன்பு.

அருணகிரியாரும், மயில் விருத்தத்தில் முருகனைக் கிருத்திகாவரபுத்ர (கார்த்திகேய) என்றழைத்தது ஈண்டுக் காணத்தக்கது.

11-12 ஆம் முத்துக்கள்.

அம்முருகனது திருநாமங்களுள் குகாலயன், குகன் என்ற இரண்டுஞ் சேருவனவாய் மிளிர்கின்றன.

நாளுப வாத மேலாக ஆக
நாடோறும் வாடி மயங்கலாமோ.

சரவணப் பொய்கை இருந்த குகையில் முதலில் தோற்றங் கொண்டானாதலின் அது கண்டமுனிவர் குகாலயன், குகன் [illegible] பயர்களை அம்முருகார்கருச் சூட்டினர். வேதவியாசர் ஸ்ரீமகா பாரதத்தில் " குகாவாஸாத் குஹோபவத்" என்றார். மனக் குகையிற் புகுமியல் புடையோன் குகையிற்றானே தோற்றமுங் காட்டியருள வேண்டும்.

13-14 ஆம் முத்துக்கள்

தேவசேநாப்ரியன், ஷஷ்டீப்ரியன், என்பன கந்தவேளது திருநாமங்கள். "தேவ சேநாப்ரியன்" என்ற சொல் தேவசேனையம்மையாரிடம் பெருங்காதல் கொண்டவன் எனப் பொருள்பெறும். "ஷஷ்டீப்ரியன்" என்ற சொல் பொதுவாக ஒவ்வொருமாதமும் வளர் பிறை ஆறும் நாளும், சிறப்பாக ஐப்பசி வளர்பிறை ஆறும் நாளும் தனக்கு விருப்ப நாளாகக் கொண்டவன் என்று பொருள் பெறும்.

ஐப்பசி வளர்பிறை ஆறும் நாளின் (மகாஷஷ்டீதிதி) சிறப்பு எங்ஙனமோங்குகின்றதென்று ஈண்டுக்காண்பாம்.

ஸ்ரீசரவணபவாவதாரகாலம், ஐப்பசி வளர்பிறை முதனாள் முதனாழிகையின் முதல் நொடிப் பொழுதாகும். அன்று எம்பெருமான் ஸ்கந்தன் எனத்திருநாம முற்றனன்.

ஐப்பசி வளர்பிறை இரண்டாம் நாளன்று சண்முகக்குமரனாகத் தோற்ற மளித்துக் குமாரன் என்ற திருப்பெயர் கொண்டனன்.

ஐப்பசி வளர்பிறை மூன்றும் நாளன்று ஈரேழுலகும் அளித்த விளையாட்டுக் கருவிகளை யேற்று விளையாடிச் சிசு என்ற திரு நாம முற்றனன்.

ஐப்பசி வளர் பிறை நான்காம் நாளன்று குகன் எனத் திருநாமமுற்றுத் திரிபுரமெய்த வில்லையே தாங்கி வீரமுழக்கஞ் செய்தும் சித்திரம், ஐராவதம் என்ற இரண்டு யானைகளையும் சக்திவேலையும் பிடித்து விளையாடியும் சங்காரஞ் செய்தும், கிரவுஞ்ச மலையைப்பிளந்தும், மருண்ட இந்திரனோடு போர்

ஊடியிரு கொங்கைமிசை கூடிவரி வண்டினமு
லாவியக டம்பமலர் தந்தருளுவாயே.

செய்து அவனைப்பணியவைத்தும், தன்னுருவாம் விசாகனைத் தோற்றுவித்தும், பற்பல திருவருள் நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தினன்.

ஐப்பசி வளர் பிறை ஐந்தாம் நாளன்று வலியவேவந்த இந்திர பதவியை வெறுத்துத்தான் வேண்டிய வாறே சேனுதிபதியபிடேகஞ் செய்து கொண்டும், "ஸ்ரீபஞ்சமி" யாகிய அந்நாளிலேயே தேவசேனையம்மையாரைத் திருமணஞ் செய்து கொண்டு, " தேவசேனுப்ரியன் " எனத் திருநாமஞ்சூட்டினன்.

ஐப்பசி வளர் பிறை ஆரும் நாளன்று " கிருதார்த்தர் " ஆய் (அன்பர் வேண்டுகோள்களை நிறைவேற்றியவர்) அளவிலாப் பேரின்ப முற்றிருந்தார். அதனுலேயே ஷஷ்டீப்ரிய: என்று திருநாமஞ் சூட்டிக் கொண்டனர். அன்பர்களுடைய வேண்டுகோள்களை யெல்லா மினிது முடித்த எக்கழுத்தத்தோடு செருக்குற்றுச் செம்மாந் திறுமாந்திருந்த நன்னுள் இவ்வைப்பசி வளர் பிறை ஆரும் நாளென்பர். இவற்றிற் கெல்லாம் ஆதாரங்களாவன:

ஸ்ரீஜ்யேஷ்ட: பஞ்சமீம் ஸ்கந்த: தஸ்மாத் ஸ்ரீ பஞ்சமீஸ்ம்ருதா. ஷஷ்ட்யாம்க்ருதார்த்தோ பூத் யஸ்மாத் தஸ்மாத் ஷஷ்டீமகாதிதி: என்ற மகாபாரதவசனங்களும், இப்பாடல்களுக்கு முன் வந்த சுலோகங்களுமாம்.

15 ஆம் முத்து: முனிவரெல்லாரும் முருகனை மயூரகேது என்பர். நம் அருணகிரியார்

" சிவத்தின் சாமி மயில்மிசை நடிக்குஞ்சாமி
யெமதுளே சிறக்குஞ் சாமி " என்றும்
" மயிலேறிய மாணிக்கமே " என்றும்,

வாயாரப் பலபடியா நவின்று நாவின்பமுறுவர். மயில் விருத்தம் பாடி மகிழ்ந்தும் வருவர்.

கல்லாடனுர் " பசுந்தழைத் தோகை மலர்க்காந் தங்கி நிலைத்த பேரொளி மேனியன் " என்று முருகனைப் புகழ்கிறர். மயூரகேது எனுஞ்சொல், மயிற்கொடி யோனுன முருகனைக் குறிக்கிறது. இம்மயில் கருடபகவானுல் பால முருகனுக்கு விளையாடத் தரப்பெற்றது என்றபொருளில்

நீபமலர் பத்தி மெத்த வோதுமவர் சித்த மெத்த
நீலமயில் தத்தவிட்டு வரவேணும்.

“ சுபர்ணேஸ்யத தௌபுத்ரம்
மயூரம் சித்ர பர்ஹிணம் ” என்று

வேதவியாசர் சொல்கிறார். கருடபகவான் அக்கினி போல் வெம்மை கொண்டவன் என்பது கருடோபாக்கியானத்தில் தெளிவாவது, தந்தையே மகனாகப் பிறக்கிறானென்ற வேத நூற் கொள்கைப்படி, கருடனது புத்ரனான மயிலும் அக்னியே. அம் மயிலை விளையாடக் கொண்ட முருகனும் அக்கினியே. முருகன் மயிலை வாகனமாகவும், கொடியின் திருச்சின்னமாகவும் ஏற்றவன் என்பது நூல்களிலறியக் கிடப்பது. தாயும் மயிற்கொடியாள். மகனும் மயிற்பதாகையன்.

16 ஆம் முத்து: மகரிஷிகள் முருகனைக் குக்குடத்துவசன் என்றும் அழைப்பர். கோழிக்கொடியோன் முருகனல்லவா. இக் கோழி சூரியபகவானால் பால முருகனுக்கு விளையாடத் தரப்பெற்றது என்ற பொருளில் வேதவியாசர் “ குக்குடஞ்ச அக்நிசங்காசம் ப்ரததாவருண:ஸ்வயம் ” என்று சொல்கிறார். முருகனது திருவவதாரத்தைத் தேவர்கள் முனிவர்களோடு கண்டு மகிழ்ந்து தாரகாசுரன் மரித்தான் என்றே தீர்மானித்துக் களித்து நின்ற அக்காலத்தில் அக் குழந்தைவேலனும் திருவிளையாடல்களைக்காட்ட தேவர்களும் பார்த்து விளையாட்டுக் கருவிப் பொருள்களாகவே மயில் முதலான வற்றைச் கையுறையாகத்தந்து திருவருள் வெண்டி நின்றார்கள் என்ற பொருளில் வியாசமுனிவர்

‘ க்ரீடத:க்ரீடனீயாநிதது: பக்ஷிகணாங்ச்சஹ ”
“ ததோ தேவா: ப்ரியாணயஸ்ய ஸர்வ ஏவஸமாஹரந் ”

என்றார்.

சூரியனும் உலகிற்குக்கண். கோழியும் யாமங்காட்டியதலால் உலகிற்குக் கண்ணாவதே. கோழியை விளையாடக் கொண்ட முருகனும் உலகிற்குக் கண்ணே, எவ்வளவு பொருத்தமாக இவையமைந்துள்ளன.

கல்லாடனார் “ பசுந்தழைத் தோகையுஞ் செஞ்சிறைச் சேவலுந்
தாங்கியும் மலர்க்கரந் தங்கியும் நிலைத்த
பேரொளிமேனியன் ” முருகனென கவில்வதையுங் காண்க.

இறையோ ஙிடமாய் விளையாடுகவே
யியல்வே லுடன்மா அருள்வாயே

வேண்டுகோள்

திரு உமை பாதம் போற்றி, சித்தர்கள் பாதம் போற்றி
அரு உருவாய் நின்ற ஐங்கரன் பாதம் போற்றி
வாசி மயில் ஏறி நின்ற சண்முகன் பாதம் போற்றி
கருவான நூல்கட் கெல்லாம் உற்ற பொருளாய்
அநுபூதி அருளித்தந்த அருணகிரி பாதம் போற்றி போற்றி

சென்னை அடியார் கூட்டத்தினர் சென்ற ஐம்பத்தெட்டு ஞாயிற்றுக்கிழமைகளில் ஸ்ரீ அருணகிரி நாதர் அருளிய "கந்தர் அநுபூதி"யின் உணர்ச்சி விளக்கத்தை ஸ்ரீ திருப்புகழ் மணியின் தெய்வீக வாயிலாக கந்த கோட்டமெத்தையிலும், சென்னை கேசவ மல்லீசுவர அநுபூதி மண்டபத்திலும் பரவசத்துடன் அநுபவித்து வருவது யாவரும் அறிந்ததே.

இந்நாளது கன்னி மாதம் 30உ (16-10-'49,) சங்கரனுக்கும், நாரணனுக்கும் உகந்த பானுவாரமும், உலகாளும் உமையாளுக்கு உகந்த நவமி திதியும், பாசங்கடந்து ஞானப் பெருக்கிட்டு ஸ்திரத்தை நாட்டும் உயர்ந்த ஆறு நக்ஷத்திரங்களில் ஒன்றாகியதும் முருகனுக்குகந்ததுமான புஷ்ய நக்ஷத்திரமும், ஸாத்ய நாம யோகமும், கரசவாகரணமும், சந்திர ஓரை கூடியதும், வித்தைக்கு நாதனாகிய குருமூர்த்தி, அடியார்க்கு ஞானம் தழைக்க தநுர் லக்கினத்திலும் கூடிய சுப தினத்தில் இவ்வநுபூதி விளக்கம் பூர்த்தியடைகிறது. அடியார்கள் திரள் திரளாக வந்து, கலந்து, இன்ப அருள் உண்டு ஞான பண்டிதனான "உபய குல தீப துங்கனின்" அருளுக்கு பாத்திரமாவார்களாக.

கவனிப்பு:— இதற்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமை முதல் (23-10-49) ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய "திருவகுப்பு" உணர்ச்சி விளக்கம் ஸ்ரீ திருப்புகழ் மணி அவர்களால் "அநுபூதி மண்டபத்தில்" வழக்கம் போல் காலை 8 மணிக்கு நடைபெறும்.

கனக மியற்றித் திரிந்துதவளு மெனைச்சற்றறிந்து
கவலை யொழித்தற் கிரங்கி யருள்வாயே

கூந்தல் விருத்திக்கு
காஷ்மீர் குஸும்
என்ற மலர் மூலிகையை
எண்ணெயுடன் கலக்கவும்.
சிறந்த சரும வைத்தியன்
ஸான்டலக்ஸ்
சந்தனக்களிம்பு.
சொரி, சிரங்கு.
தீப்புண், காயம், குணமடைய.
யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மெதராஸ்.

மைசூர் M.R. ஜெட்டப்பாவின்
பிரேமலீலா அகர் பத்தி
பிரேமலீலா ஸ்பெஷல் அகர் பத்தி
பிரேமலீலா ஜவ்வாது பத்தி

நஞ்சன்கூடு பல்பொடி
I.D.L. 61, மெடிகேடட்.
பல்வியாதிகளையும் கண்டிக்கிறது.
ஜிஞ்சிப் அஜீர்ண பித்த சமனி.
கூலெக்ஸ் சிறந்த ஸ்நான தைலம்.
குழந்தை மருந்துகள்
காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை.
கர்ஜன் பாலக்ஸ்
கோரோஜனை மாத்திரை. பேதியாக மாத்திரை.
யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

" அமிர்தவசனி "

வருட சந்தா ரூ. 1-8-0

வெளி நாடுக்கு ரூ. 2-0-0

அனுப்பவும். (வி. பி. இல்லை)

(சில ஊர்களில் ஏஜெண்டுகள் தேவை)

251

" யாவர்க்கு மாம் இறை
வற் கொரு பச்சிலை;

யாவர்க்கு மாம் பசுவிற்
கொரு வாயுரை;

யாவர்க்கு மாம் உண்ணும்
போதொரு கைப்பிடி;

யாவர்க்கு மாம் பிறர்க்
கின்னுரை தானே"

(திருமந்திரம்)

No. 1506
அசோகர்
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Reg. No. M. 5390

252

ஷண்முகம் பிராண்டு
ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திர
வாதமுமான சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்
"ஸ்வர்ண மாளிகை"
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.,
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி, - மதுரை.
TEL:—"FAITH" ESTD:—1924. PHONE:—113

நீங்கள் விரும்பக்கூடிய உயர்ந்த
உண்மையான ரகங்கள், பல
வகை பட்டு, நூல் ஆடை
களுக்கு கியாதிபெற்ற
நம்பிக்கையான
இடம்
கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்
பட்டு அண்டு கைத்தறி ஜவுளி வியாபாரம்
53, கிடங்கு தெரு, மதராஸ்-1.

Printed by T. Iyaswamy, Manager Haddon & Co.,
49, Badrian St., Madras 1. Phone No. 55044.
Edited & Published by S. M